பொதுசன நூலகம்
உடனுதவும்
28 -07- 1992
யாழ்ப்பாணம்


# பாதுகாவலன்

PATHUKAVALAN


## முக்கிய அறிவித்தல்

கடுமையான காகிதத் தட்டுப்பாட்டினால் ஏற்பட்டிருக்கும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் சந்தா பாக்கியுள்ளவர்களுக்கும், சந்தா முற்பணம் கட்டாதவர்களுக்கும் பத்திரிகை அனுப்பிக்கொண்டிருக்க இயலாது. எனவே, பாதுகாவலன் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமென்றால் உடனடியாக உங்கள் சந்தாவை அனுப்பி வையுங்கள்.

மலர்: 118 இதழ் : 16 24–07–1992 ( யூலை 24 — ஆகஸ்ட் 07 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

### ● பெரிய கோயில் உபாத்தியாயர்

## ★ சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு விழா எடுப்பது

# நமது கடமையும் உரிமையும் நன்றிக்கடனுமாகும்

— புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர்

"ஈழத்தின் வடபகுதிக்கு முதன்முறையாக சுவாமி விபுலாநந்த அடிகளார் வந்து, எமது கல்லூரி மணணில் காலடி வைத்து, 3 வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த காரணத்தால், புனித பத்திரிசியார் கல்லூரி கடமை, உரிமை,அன்பு என்ற உணர்வுகளுடன் அவரைப் பெருமையுடன் போற்றி விழா எடுப்பது மிகவும் பொருத்தமானது" என்று கூறினார் கல்லூரி அதிபர், அருட் தந்தை A. I. பேர்ணாட் அவர்கள். கடந்த வெள்ளியன்று அடிகளாரின் பிறப்பு நூற்றாண்டு நிறைவையொட்டி கல்லூரியில் நடந்த காலை வைபவத்தில் மேற் கண்டவாறு கூறிய அவர் யாழ் ஆயர் அனுப்பிய விசேட ஆசிச்செய்தியையும் வாசித்தளித்தார்.

வண. பிதா ஜெறோ செல்வநாயகம் வரவேற்புரை வழங்க, சிறப்பு நிகழ்ச்சியாக காலையில் ஆய்வரங்கு இடம் பெற்றது. இதற்கு பேரறிஞர் சைவப்புலவர் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் தலைமைதாங்கி, பெருந்திரளாய் கூடியிருந்த அவையினர் யாவரும் பயன்படக்கூடிய விதத்தில் அவருக்குரிய சிறப்பான தனிப்பட்ட பாணியில், ஆய்வுரைகளை நெறிப்படுத்தி எல்லோரினதும் பாராட்டைப் பெற்றார்.

இந்து சமயத்தில் விபுலாநந்தர் என்ற தலைப்பில் ஆசிரியர் வாகரைவாணன் அரியதோர்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

### சுவாமி விபுலாநந்த நூற்றாண்டு விழாவிற்கு யாழ். ஆயர் அளித்த ஆசிச் செய்தி

## ★ எமது காலத்திற்கேயுரிய ஒரு ஞானி

சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் பிறப்பின் நூற்றாண்டு விழாவானது, இலங்கையின் வட – கிழக்கு வாழும் தமிழராகிய நமக்கும், அகில உலகில் வாழும் தமிழருக்கும், அடிகளாரை ஆட்கொண்ட பலதரப்பட்ட சேவை மனப்பாங்கை நாம் உள்வாங்கி, தன்மயமாக்குவதற்கும், எமது மக்களுக்காகவும் அம்மக்களின் சமயம், மொழி, பண்பாடு என்பவற்றிற்காகவும் எமது வாழ்வை அர்ப்பணித்தற்கும் கிடைத்த அரியதொரு வாய்ப்பாய் இருக்கிறது.

சேவைகளையும் அர்ப்பணிப்புகளையும் கொண்டமைந்த அவரின் பிற்கால வாழ்வைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டும் என நிச்சயமாகக் கூறலாம்.

சுவாமி விபுலானந்தர் எல்லா மக்களுக்கும் எக்காலத்துக்குமுரிய ஒரு மனிதனாகத் திகழ்ந்தார். மனித வாழ்வுக்கான பாதையைக் காட்டுவதிலும் அவ்வாழ்வின் புதிய போக்குகளை தீர்மாணிப்பதிலும் அவர் கொண்டிருந்த தீர்க்கதரிசனமான தொலை

## மரண தண்டனைக்கு எதிர்ப்பு

சோல் மறைமாவட்ட பேராயர் கருதினால் கிம் சோஹுவான் மரணதண்டனையை நீக்கும்படி தென் கொரிய அரசைக் கேட்டுள்ளார்.

''கைதிகளுக்கு மனந்திரும்பு

## நீதியையும் மனித மாண்பையும் பரப்ப... திருத்தந்தையின் அழைப்பு

குருக்களையும் துறவிகளையும் மட்டுமல்ல, பொதுநிலையினரையும் தமது வீடுகளை விட்டுவிட்டு மறைபரப்பாளராகும்படி திருச்சபை அழைக்கிறது என திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் கூறியுள்ளார். உலகெங்குமுள்ள பொதுநிலையினர் பிரதிநிதிகளையும் பொதுநிலையினருக்கான திருத்தந்தையின் சபையினரையும் சந்தித்த திருத்தந்தை அநேக பொதுமக்கள் இறைவனதும், திருச்சபையினதும் அழைப்பையேற்று மறைபரப்பாளராக மாறவேண்டுமென ஆசித்தார்.

பொதுநிலையினர் தமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, திருச்சபைக்கும் சமுதாயத்துக்கும் பணிபுரிவதற்கென அமைக்கப்பட்ட இயக்கங்கள் பலதரப்பட்டவை. அதே போன்று மறைபரப்பாளர் தேவைப்படும் சந்தர்ப்பங்களும் பலதரப்பட்டவை, என்று அவர் கூறினார். கிறிஸ்துவை இன்னும் அறி

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

**25-07-1992**

அருளோடும் அன்போடும் எமையாளுகின்ற

யாழ். ஆயர்

**வ. தியோகுப்பிள்ளை**

ஆண்டகையின்

பெயர் கொண்ட



பாணியில், ஆய்வுரைகளை

## மரண தண்டனைக்கு எதிர்ப்பு

சோல் மறைமாவட்ட பேராயர் கருதினால் கிம் சோஹ ்வான் மரணதண்டனையை நீக்கும்படி தென் கொரிய அரசைக் கேட்டுள்ளார்.

''கைதிகளுக்கு மனந்திரும்புவதற்கு இடமளிக்காததன் மூலம் அது அவர்கள் புது வாழ்வை அடைந்துகொள்ளும் நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது. இது கிறிஸ்தவ மதத்திற்கு ஒரு களங்கமாகும். வன்முறைக் குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிய ஒரே வழி குற்றவாளிகளை வெறுப்பதற்குப் பதில் அவர்களை அன்பு செய்வதாகும்'' என்று அவர் குறிப்பிட்டார்.

1991 மனித உரிமைகள் தினத்தையொட்டி கொரிய கத்தோலிக்க ஆயர் பேரவை வெளியிட்ட சுற்றுமடல் ''உயிருக்கு மதிப்பு'' என்பதையே கருப்பொருளாகக் கொண்டிருந்தது. கொரிய திருச்சபை நாடளாவிய முறையில் மரண தண்டனையை எதிர்த்தது இதுவே முதற் தடவையாகும்.

விழாவானது, இலங்கையின் வட – கிழக்கு வாழும் தமிழராகிய நமக்கும், அகில உலகில் வாழும் தமிழருக்கும், அடிகளாரை ஆட்கொண்ட பலதரப்பட்ட சேவை மனப்பாங்கை நாம் உள்வாங்கி, தன்மயமாக்குவதற்கும், எமது மக்களுக்காகவும் அம்மக்களின் சமயம், மொழி, பண்பாடு என்பவற்றிற்காகவும் எமது வாழ்வை அர்ப்பணித்தற்கும் கிடைத்த அரியதொரு வாய்ப்பாய் இருக்கிறது.

மட்டக்களப்பில் அமைந்த கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வியறிவூட்டப்பட்ட இளம் சாமித்தம்பி மயில்வாகனம், கல்முனையிலும் மட்டக்களப்பிலுமுள்ள கத்தோலிக்க கல்லூரிகளில் ஓர் ஆசிரியராகப் பணிபுரிந்தபின், 1917இல் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் போதனாசிரியர் குழாமில் விஞ்ஞான ஆசிரியராகச் சேர்ந்தார். சுவாமி அவர்கள் தமது இளமைப் பருவத்தின் முதற் கூறுகளில் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் கொண்டிருந்த இத்தொடர்பே, சமூகத்தின் பல்வேறு துறைகளுக்கான தமது அவரின் பிற்கால வாழ்வைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டும் என நிச்சயமாகக் கூறலாம்.

சுவாமி விபுலானந்தர் எல்லா மக்களுக்கும் எக்காலத்துக்குமுரிய ஒரு மனிதனாகத் திகழ்ந்தார். மனித வாழ்வுக்கான பாதையைக் காட்டுவதிலும் அவ்வாழ்வின் புதிய போக்குகளை தீர்மாணிப்பதிலும் அவர் கொண்டிருந்த தீர்க்கதரிசனமான தொலை நோக்கானது சமயம் சார்ந்ததும் இனம் சார்ந்ததுமான சகல தடைகளையும் கடந்து நின்றது. சமயம், கல்வி, சமூகம், இலக்கியம், இசை, மொழி என்னும் தமிழரின் பாரம்பரிய சொத்துக்களின் பால் சுவாமி விபுலாந்தர் அடிகளின் விலை மதிப்பிட முடியாத பங்களிப்பானது, அவரைத் தனித்துவம் வாய்ந்த ஒரு பேரறிஞராகக் காட்டுவதோடு, எமது காலத்துக்கேயுரிய ஞானியாகவும் இனம் காட்டுகின்றது.

வ. தியோகுப்பிள்ளை
யாழ் ஆயர்

**புதிய குருமணிகளுக்கு காவலனின் நல் வாழ்த்துக்கள்!**

( 3ஆம் பக்கம் பார்க்க )

25-07-1992

அருளோடும் அன்போடும் எமையாளுகின்ற



யாழ். ஆயர்
**வ. தியோகுப்பிள்ளை**
ஆண்டகையின்
பெயர் கொண்ட
புனித யாகப்பர்
பெருநாளில்
ஆயர் அவர்கள்

ஆன்ம–சரீர நலனோடு நீடு வாழ்கவென்று
நெஞ்சார வாழ்த்துகின்றோம்!!

## குடும்ப செபமாலை இயக்கத்தின் குரு மரணம்

குடும்ப செபமாலை ஊக்குவிப்புக்கு உலக புகழ்பெற்ற திருச்சிலுவை சபையைச் சேர்ந்த அருட்தந்தை பற்றிக் பேற்றன் தனது 83ஆவது வயதில் கலிபோர்னியாவில், யூன் 3ஆம் திகதி காலமானார். 50 வருடங்களுக்கு முன் 1942ஆம் ஆண்டில் குடும்ப செபமாலை இயக்கத்தை ஆரம்பித்த இவர், வானொலி திரைப்பட உலகில் பிரசித்தி பெற்ற லொறேற்றா யங், பி(b)ங்குறோஸ்பி, கிறகரிபேக், கிறேஸ் கெலி, றொனால்ட் றீகன், இன்னும் பலரின் உதவியுடன் குடும்ப செபத்தின் வல்லமையை தனிநிகர்ச் செய்தியாக, மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் உலகிற்கு எடுத்துரைத்தார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# பிரிவும் உறவும்

'என்பின்னே வாருங்கள்' என்று இயேசு அழைத்தவுடன் சீடர்கள் தங்கள் பெற்றோரையும், உடமைகளையும் விட்டுப் பிரிந்து அவரைப் பின் சென்றனர். (லூக். 14:26-33). இயேசுவோடு ஐக்கியமானவர்கள் மீண்டும் புதிய முறையில் படைப்பனைத்தோடும் உறவுகொள்கின்றனர். படைப்பனைத்திற்கும் போதிக்கின்றனர். (மாற். 16:20)

குருக்கள், துறவிகள் மட்டுமல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னிடமிருந்தும், உறவினரிடமிருந்தும், உடமைகளிலிருந்தும் தன்னையே துண்டித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு அனைத்தையும் துறப்பது துறவு ஆகும். ஆனால் இத்தோடு எல்லாம் முடிந்து விடுவதில்லை. இதுதான் சீடத்துவத்தின் முதல் நிலையாகும்.

இவ்வாறு படைப்பனைத்தோடு உறவை முறித்துக் கொண்ட மனிதன் இறைவனோடு மிக நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். படைத்த இறைவனோடு படைக்கப்பட்ட மனிதன் இணைய வேண்டும். ''நான் உங்களில் நிலைத்திருப்பது போல் நீங்கள் என்னில் நிலைத்திருங்கள்,'' (அரு. 15:4)என்று யேசு சொன்னார். இது இரண்டாம் நிலையாகும்.

இவ்வாறு இறைவனோடு ஐக்கியமான மனிதன் தன்னையும், தன் அயலாரையும், புதிய கண்ணோட்டத்தில் காண்கிறான். அவைகளிடமிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்ட மனிதன் கடவுளிடமிருந்து அவர் துணையுடன் மீண்டும் அவைகளை நோக்கிச் செல்லுகிறான். இது மூன்றாம் நிலையாகும்.

ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் திறமைகளை அறிந்து, தாங்கள் கடவுளின் சாயல் என்பதை உணர்ந்து தங்களையே அன்பு செய்யவேண்டும். ஆனால் சுயநல அன்பு தவறாகும். கடவுளை மையமாகக் கொண்டு தன்னிறைவு அடைந்துள்ள மனிதன் தன்னைத் தன் அயலானுக்கு அளிக்க வேண்டும். உலகையும் அதன் பொருட்களையும் புதிய கண்ணோட்டத்தில் காணவேண்டும். ''படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைக்குரிய மகிமையும், விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளது.'' (உரோ. 8:21) நம்மிடம் ஒப்படைத்த எல்லா செல்வங்களுக்கும் கடவுளுக்கு கணக்குக்கொடுக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். நம் உலக செல்வங்களும் வானக வாழ்வடைய உதவும்.

இவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவனும் மூவித நிலைகளினூடாக நிறைவைப் பெறவேண்டும்: படைப்பை விட்டு படைத்தவனை நோக்கிப் போக வேண்டும் (Asceticism). படைத்தவரோடு ஐக்கியமாக வேண்டும் (Mysticism). மீண்டும் படைப்பை நோக்கிச்

# ★ சுவாமி விபுலாநந்த அடிகள் இறைபக்தி நிறைந்த சகல கலா வல்லபன்

நல்லவைகள், புனிதமானவைகள், மதிப்பிற்குரியவைகள் எங்கிருப்பினும் அதைப் போற்றி வளர்ப்பதை கிறிஸ்தவம் தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

சுவாமி விபுலாநந்தர் தமிழர்களின் அருஞ் சொத்து. வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று தமிழ்மக்கள் அனைவருமே அவரைப் பெருமைப்படுத்த வேண்டும்.

தமிழ் மொழிக்கும் தமிழர் வாழ்வுக்கும் பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருக்கும் இக்காலகட்டத்தில், தமிழ் மக்கள் மதம் என்றும் பிரதேசம் என்றும் பிரிவுகளை வளர்க்காது, ஒன்றுபட்டு இயங்குவதும், தம் பழம் பெருமைகளைக் கட்டிக் காப்பதும், நம் அறிஞர்களை மதித்துப் போற்றுவதும் அவசியமாகும்.

1922 ஆம் ஆண்டு, அதாவது அவரது 30 வயதில், வாலிப வயதின் உச்சக்கட்டத்தில் அவர் இராமகிருஷ்ண சங்கத் துறவியாகத் தீர்மானித்தார். அப்போது அவருக்கிருந்த புகழ், பதவி, சமுதாய அந்தஸ்து அத்தனையையும் துச்சமென மதித்து அவர் இந்த முடிவை மேற்கொண்டாரென்றால் அது எத்தகைய மகத்தான தியாகம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர் இவ்வாறு புரட்சிகரமான ஒரு முடிவை மேற்கொண்டதற்கு மூலகாரணமாக இருந்தது எது என்பது நமது சிந்தனைக்குரியது.

ஒரு பறவையானது வானில் பறந்து செல்வதற்கு இரண்டு சிறகுகள் எங்ஙனம் அவசியம் தேவைப்படுகிறதோ அதே போன்று மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு விஞ்ஞானமும் மெய்ஞானமும் இன்றி அமையாது வேண்டப்படுவது என்பது அடிகளாரின் சித்தாந்தமாகும்.

இவர் இறைபக்தி மிகுந்தவராக விளங்கியமையால் பற்றற்றான் பற்றினைப்பற்றித் துறவியாகி சைவ சமயத்திற்கு பல தொண்டுகள் புரிந்தார். இவரது துறவு வாழ்க்கையும் வேதாந்த அறிவும், கல்விக் கருத்துக்களுக்கும் சிந்தனைகளுக்கும் உற்றதுணையானது மட்டுமன்றி, கல்விப்பணிகளை மேற்கொள்ளவும் உதவியாக அமைந்தன.

சமயமில்லாக் கல்வியினால் பயனில்லை என்பது இவரது கொள்கையாகும். எனவே பரந்த சமய அறிவின் மூலம் அன்பை வளர்த்து, அறிவைப் பெருக்கி, பண்பை உயர்த்தி சமத்துவம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை எனும் உயரிய விழுமியங்களை உருவாக்கப் பணி பல புரிந்தார்.

''உள்ளத் தூய்மையுடன் அன்பு காட்டுவதைவிட மேலானது வேறெதுவுமில்லை'' என்பதையே தனது வாழ்வின் இலட்சிய நெறியாகக் கொண்டு செயற்பட்டார்.

சமயத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்தரக்கல்வியின் மூலம் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். தமிழ் ஈழத்திலே ஒரு வீறு கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தம் அறிவு, ஆற்றல், அருட்சக்தி அத்தனையையும் அர்ப்பணம் செய்தவர் என்பதே நாம் சுவாமி விபுலாநந்தரை நினைவு கூரும் போது நமது சிந்தனை, செயலில் தேக்கி வைக்க வேண்டிய எண்ணம்.

அடிகளார் சகல கலா வல்லபனாகத் திகழ்ந்தமையால், ஆசிரியராக, அதிபராக, பேராசிரியராக, பல்சுவைக் கவிஞராக, முத்தமிழ் வித்தகராக, பல சஞ்சிகைகளின் ஆசிரியராக, மொழியியல் ஆராய்ச்சியாளராக, பல துறைகளிலும் விற்பன்னராக, உயர் பதவிகளை வகுத்தார். தமிழ் நாட்டிலும், இலங்கையிலும், உலகின் முதல் தமிழ்துறை பேராசிரியராக விளங்கிய பெருமை அடிகளாரையே சாரும்.

அன்னாரின் பணி தொடர, அவர் இலட்சியவாழ்வு மக்களைத் தொட நாம் உழைக்க வேண்டும்.

# சன்மார்க்க நெறியில் மானிடத்தை நேசித்த ஓர் துறவி

★ ந. ஆனந்தி

இறைவனைக் கண்டு இசையிலே இசைந்து கனிந்த தமிழ்ப் பரம்பரையின் பெருந்தவப் பேறாய் விளங்கிய விபுலாநந்த அடிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைதீவு எனும் சிற்றூரில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி பிறந்தார். மயில் வாகனன் என்பது இவரின் பிள்ளைத் திருநாமம். இவர் ஓர் விஞ்ஞான இளமாணிப்பட்டதாரி (B.Sc). இவற்றோடு மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி, அப்பரீட்சை கிலம், தமிழ், மட்டுமன்றி வடமொழி, லத்தீன் முதலாம் பழம் பெருமொழிகளிலும் இவர் பாண்டித்தியம் பெற்றார்.

மயில் வாகனனார் யாழ்ப்பாணத்திலுள்ள சம்பத்திரிசியார் கல்லூரியில் 3 ஆண்டுகள் உதவி ஆசிரியராகவும், பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலே அதிபராகவும் அமர்ந்திருந்தார். இக்காலத்திலே உலக வாழ்க்கையிலே அவருக்கு உவர்ப்புத்தோன்றியது. ''பற்றற்றான் பற்றினைப்பற்றி'' கிருஷ்ண மிஷனிலே சேர்ந்து பிரமச்சாரியங் காத்து விபுலாநந்த அடிகளானார்.

அவரின் பெரும் புலமையறிந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறை தலைமை நடாத்த அழைக்கவே விபுலாநந்த அடிகள் அங்குசென்று தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்து தமிழ்ப் பணி புரிந்தார். இவரிடம் தமிழ் கற்ற பலர் இன்று பல்கலைக்கழகம் பலவற்றிலே பேராசிரியராகவும், கல்லூரி அதிபர்களாகவும் விளங்கிப்

வுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைக்குரிய மகிமையும், விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளது.'' (உரோ. 8:21) நம்மிடம் ஒப்படைத்த எல்லா செல்வங்களுக்கும் கடவுளுக்கு கணக்குக்கொடுக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். நம் உலக செல்வங்களும் வானக வாழ்வடைய உதவும்.

இவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவனும் மூவித நிலைகளினூடாக நிறைவைப் பெறவேண்டும்: படைப்பை விட்டு படைத்தவனை நோக்கிப் போக வேண்டும் (Asceticism). படைத்தவரோடு ஐக்கியமாக வேண்டும் (Mysticism). மீண்டும் படைப்பை நோக்கிச் செல்ல வேண்டும் (Mission).

இறைவனோடு இணைந்து படைப்பை அணுகிப் புதுப்பிப்போமாக!

பரம்பரையின் பெருந்தவப் பேறாய் விளங்கிய விபுலாநந்த அடிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைதீவு எனும் சிற்றூரில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி பிறந்தார். மயில் வாகனன் என்பது இவரின் பிள்ளைத் திருநாமம். இவர் ஓர் விஞ்ஞான இளமாணிப்பட்டதாரி (B.Sc). இவற்றோடு மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி, அப்பரீட்சையிலே முதன் முறையாகத் தேறிய ஈழத்தவர் என்ற பெருமை இவருக்குண்டு. ஆங்

பழம் பெருமொழிகளிலும் இவர் பாண்டித்தியம் பெற்றார்.

மயில் வாகனனார் யாழ்ப்பாணத்திலுள்ள சம்பத்திரிசியார் கல்லூரியில் 3 ஆண்டுகள் உதவி ஆசிரியராகவும், பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலே அதிபராகவும் அமர்ந்திருந்தார். இக்காலத்திலே உலக வாழ்க்கையிலே அவருக்கு உவர்ப்புத்தோன்றியது. ''பற்றற்றான் பற்றினைப்பற்றி'' உலகப்பற்றை விடல் வேண்டுமென்ற பேரவா ஏற்பட்டது. இவற்றின் பயனாக இராம

நந்த அடிகளானார்.

அவரின் பெரும் புலமையறிந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறை தலைமை நடாத்த அழைக்கவே விபுலாநந்த அடிகள் அங்குசென்று தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்து தமிழ்ப் பணி புரிந்தார். இவரிடம் தமிழ் கற்ற பலர் இன்று பல்கலைக்கழகம் பலவற்றிலே பேராசிரியராகவும், கல்லூரி அதிபர்களாகவும் விளங்கிப் புகழ் நாட்டி வருகின்றனர். இவரே அண்ணாமலைப் பல்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## ஆயரும் குருவும்

யூலை திங்கள் 28ஆம் நாள் யாழ். பேராலயத்தில் ஏழுபேர் குருக்களாக திருநிலைப்படுத்தப்படுவர்.

நித்திய குருவாம் இயேசுக்கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குபெறும் குருக்கள் இறைமக்கள் முன்னிலையில் மறை ஆயருக்கு பிரமாண வாக்குறுதி கொடுக்கின்றனர். ஆயரிடமிருந்து குருத்துவத்தைப் பெற்ற ஒருவர் அவருடன் ஒன்றித்து அவருடைய அறிவுரைகளை ஏற்று ஆணைகளுக்குப் பணிந்து செயல்பட வேண்டியது தேவையும் கடமையுமாகும்.

ஆயரின்றி குருத்துவப்பணி அர்த்தமற்றது. குருக்கள் தங்கள் ஆயருடன் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். ஆயர் தன் குருக்களுடன் ஒருமனப்பட்டிருந்தால் இவர்களின் கூட்டுமுயற்சி வலிமையும், பலனும் மிகுந்ததாயிருக்கும்.

சுதந்திரவுணர்வு குருகுலத்தவரிடையிலும் பரவியுள்ள இன்று இந்தக் கூட்டுறவு - குருக்கள் தங்கள் ஆயருடன் ஒன்றித்து உழைக்கவேண்டியது - வலியுறுத்தப்படவேண்டும்.

குருக்கள் எங்கு பணிபுரிந்தாலும் அவர்கள் பணிபுரியும் இடங்களில் தங்கள் ஆயரின் பிரதிநிதிகள் மட்டுமே என்று மனதில் என்றும் கொள்ளவேண்டும்.

### உங்கள் சிந்தனைக்கு

1. மரியாதையும், இன்சொற்களும் பல துன்பங்களைக் கடக்க உதவுகின்றன. (ஜான் வான்பர்க்)
2. தன் நம்பிக்கையே வீரத்தின் சாரம். (எமர்சன்)
3. கடந்த காலக் கவலைகளை மறந்து விட்டு இன்றைய சூழ் நிலைக்கு ஏற்றவாறு வாழக் கற்றுக் கொள். (எபிக்யூரன்)
4. இன்சொல் வழங்குவதால் நாக்கு காயமுறுவதில்லை. (ஹேவுட்)
5. இன் சொற்களின் விலை அற்பமானது, ஆனால் அதன் மதிப்போ மிகுதியானது. (ஹெர்பர்ட்)

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்**

● யாழ். மரியன்னை பேராலயத்தில்

★ யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால்

# குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கு

1992, யூலை 28ஆம் திகதி — காலை 9-00 மணிக்கு

## மறைமாவட்ட புதிய குருக்கள்



K. ஜேம்ஸ் சிங்கராயர்.

அருட் செல்வன் ஜேம்ஸ் சிங்கராயர் வயாவிளான் உத்தர்யமாதா கோவிலைச் சேர்ந்த ஆசிரியத் தம்பதிகளான திரு. சி. சி. கருணாதிராசா, ஹாட்ஸ் கருணாதிராசா என்பவர்களுக்கு தலைமகனாக 23-08-66 ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக்கல்வியை வயாவிளான் றோ. க. த. க பாடசாலையிலும், நு/ இராகலை த. ம. வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் யாழ். புனித மடுத்தீனார் குருமடத்தில் மூன்று ஆண்டுகள் ஆரம்பக் குருத்துவப் பயிற்சியையும், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவ கல்லூரியில் மெய்யியல், இறையியல் பயிற்சி நெறிகளையும் கற்றுத் தேர்ந்தார். இவர் ஆடித்திங்கள் 29ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் தமது முதற் திருப்பலியை நிறைவேற்றவுள்ளார்.



J. குவென்ரின் ஜெயறஞ்சன்.

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி சாமிநாதர் அக்னேஸ் அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் யோண் குவென்ரின் ஜெயறஞ்சன் 21-10-1965 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை சில்லாலை றோ. க. த. க. பாடசாலையிலும், தொடர்ந்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். 1981 இல் புனித மாட்டினார் குருமடத்தில் இணைந்த இவர் 1984 இல் கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து அங்கு மெய்யியல், இறையியல் கல்வியை முடித்துக்கொண்டார். இவர் தனது முதற் திருப்பலியை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நிறைவேற்றவுள்ளார்.

## கிளரீசியன் சபைக் குருமணி



T. L. றொகான் டோமினிக்.

கிளரீசியன் சபையைச் சேர்ந்த அருள் சகோதரன் T. L. றொகான் டோமினிக் திரு. திருமதி சொ. டோமினிக் தம்பதிகளின் ஏகபுதல்வனாவார். 23-02-62 இல் பிறந்த இவர் தமது ஆரம்ப கல்வியை கண்டி நல்லாயன் பாடசாலையிலும், யாழ் திருக்குடும்பக் கன்னியர் ஆங்கில பாடசாலையிலும், பின் புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியை கற்றபின் கிளரீசியன் சபையில் சேர்ந்து மதுரையில் தனது மெய்யியல் கல்வியையும், பெங்களூர், மணிலா, (பிலிப்பைன்ஸ்) ஆகிய இடங்களில் தனது இறையியல் கல்வியையும் மேற்கொண்டார். 1983 ஆடி மாதம் 3ஆம் நாள் தனது முதல் வார்த்தைப்பாட்டை நிறைவேற்றிய இவர் கிளரீசியன் சபையைச் சேர்ந்த இலங்கையின் நான்காவது குரு ஆவார். இவர் தனது முதல் திருப்பலியை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

## அ.ம.தி.களின் புதிய குருக்கள்

யாழ். அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர்கள் அ. பி. லொசிங்ரன், ஞா. அற்புதராஜா, அ. இம்மனுவேல், செ. எட்வின், ஆகிய நால்வரும் தங்கள் குருத்துவப் பயிற்சி அனைத்தையும், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆரம்ப குருமடத்திலும், மெய்யியலை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் நவ சந்நியாச வாழ்வை பண்டாரவளை திருஇருதய நவ சந்நியாச இல்லத்திலும் இறையியலை அம்பிட்டியா தேசிய குருத்துவக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்கள்.

□ □ □ □



அ. இம்மனுவேல்.


அருட்சகோதரன் அ. இம்மனுவேல் மாதகலைச் சேர்ந்த திரு. திருமதி. ம. அருளானந்தம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வன் ஆவார். 08-03-1963 இல் பிறந்த இவர் தனது ஆரம்ப கல்வியை மாதகல் றோ. க. பாடசாலையிலும், உயர்கல்வியை இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

இவர் தமது முதற் திருப்பலியை இறைவனுக்கு நன்றிப்பலியாக 01-08-1992 வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.



செ. எட்வின்.

அருட்சகோதரன் செ. எட்வின் ஏழாலையைச் சேர்ந்த திரு. திருமதி. செல்வரட்ணம் தம்பதிகளின் மூன்றாவது புதல்வன் ஆவார். 03-05-1965 இல் பிறந்த இவர் தமது ஆரம்ப கல்வியை ஏழாலை றோ. க. த. பாடசாலையிலும், கொழும்புத்துறை புனித சூசையப்பர் வித்தியாலத்திலும் புனித. பத்திரிசியார் கல்லூரியில் இடைநிலை, மேல்நிலை கல்வியையும் பயின்றார். இவர் தமது முதல் திருப்பலியை இறைவனுக்கு நன்றிப்பலியாக 29-07-1992 புதன் கிழமை மாலை, 4.00 மணிக்கு சாவகச்சேரி புனித. லிகோரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.



அ. பி. லொசிங்ரன்.

அருட்சகோதரன் அ. பி. லொசிங்ரன், பலாலி புனித. செபஸ்தியார் ஆலயத்தை சேர்ந்த காலஞ்சென்ற திரு. சு. அந்தோனிப்பிள்ளை, திருமதி. றோசறி மரியம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் ஆவார். 16-04-1962 இல் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை மயிலிட்டி றோ. க. பாடசாலையிலும், இடைநிலை, உயர்நிலைக்கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும் கற்றார்.

இவர் தமது முதற் திருப்பலியை, இறைவனுக்கு நன்றிப்பலியாக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் 31-07-92 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஒப்புக் கொடுப்பார்.



ஞா. அற்புதராஜா.

அருட்சகோதரன் ஞா. அற்புதறாஜா சுண்ணாகத்தைச் சேர்ந்த திரு. திருமதி. யோ. ஞானப்பிரகாசம் தம்பதிகளின் மூத்த புதல்வன் ஆவார். 07-03-1963 இல் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை சுண்ணாகம் றோ. க. பாடசாலையிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

இவர் தமது முதற் திருப்பலியை 30-07-1992 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு சுண்ணாகம், புனித அந்தோனியார் ஆலயத்தில் இறைவனுக்கு நன்றிப்பலியாகஒப்புக் கொடுப்பார்.

□ □ □ □

## மன்னார் ஆயரினால் — ஆகஸ்ட் 6-ம் நாள்



A. F செலஸ்ரின் மஸ்க்கிழிஞ்ஞ

சகோதரன் அ. பிரான்சிஸ் செலஸ்ரின் மஸ்க்கிழிஞ்ஞ அ. ம. தி. பேசாலையைச் சேர்ந்த சீமான் அருளானந்தம் மஸ்க்கிழிஞ்ஞ, காலம் சென்ற திரேசம்மாள் குருஸ் தம்பதியரின் புதல்வராவார். 10-03-1957இல் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை பேசாலை பத்திமா றோ. க ஆண்கள் பாடசாலையிலும் தமது உயர்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரி, கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றுத்தேர்ந்தார்.

இவர் தமது மெய்யியற் கல்வியை மட்டக்குளியிலும், கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் கற்ற பின் தனது நவசந்நியாசத்தை பண்டாரவளையிலும் மேற்கொண்டார். இவர் தமது இறையியற் கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் கற்றார்.

இவர் ஆவணித் திங்கள் 6ஆம் நாள், வியாழக்கிழமை, காலை 7.30 மணிக்கு, மன்னார் ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் குருத்துவ திருநிலைக்கு அபிஷேகம் செய்யப்படவுள்ளார். மறுநாள் தமது முதற் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

# ஆயர் மன்ற புதிய நியமனங்கள்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் 1992 — 95 ஆண்டுகளுக்கான பின்வரும் புதிய பணிப்பொறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

தலைவர் — மகா. வந். நிக்லஸ் மார்க்கஸ் பெர்னான்டோ.

உப தலைவர் — அதி. வந். தோமஸ் சவுந்தரநாயகம்.

பொதுச் செயலாளர் — அதி. வந். ஒஸ்வல்ட் கோமஸ்.

உப பொதுச் செயலாளர் — அருட். திரு. என். டயஸ் கருனாரத்ன.

நிர்வாகக் குழு — மகா. வந். நிக்லஸ் மார்க்கஸ் பெர்னான்டோ, அதி. வந். தோமஸ் சவுந்தரநாயகம், அதி. வந். ஒஸ்வல்ட் கோமஸ், அதி. வந். பிராங் மார்க்கஸ் பெர்னான்டோ, அதி. வந். வியானி பெர்னான்டோ.

நிதிக் குழு — அதி. வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, அதி. வந். றேமன் பீரிஸ், அதி. வந். எட்மன் பீரிஸ்.

**தேசிய கத்தோலிக்க மறை அறிவிப்புப்பணி ஆணைக் குழு:—**
அதி. வந். மல்கம் ரஞ்சித், அதி. வந். ஹென்றி குணவர்த்தன.

**தேசிய கத்தோலிக்க கல்வி, மறைக்கல்வி, வேதாகமப் பணி ஆணைக் குழு:**
அதி. வந். பிராங் மார்க்கஸ் பெர்னான்டோ, அதி. வந். வ. தியோகுப்பிள்ளை.

**தேசிய கத்தோலிக்க கிறிஸ்தவ ஒன்றிப்புக் கலந்துரையாடல் ஆணைக் குழு:**
அதி. வந். ஹென்றி குணவர்த்தன, அதி. வந். தோமஸ் சவுந்தரநாயகம்

**தேசிய கத்தோலிக்க சமூகத் தொடர்பு ஆணைக் குழு:**
அதி. வந். பிராங் மார்க்கஸ் பெர்னான்டோ, அதி. வந் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை.

**தேசிய கத்தோலிக்க குருத்துவக் கல்லூரி மாணவர்கள், குருக்கள், துறவிகள், உலகுசார் துறவிகள் ஆணைக் குழு:**
அதி. வந். வியானி பெர்னான்டோ, மகா. வந். நிக்லஸ் மார்க்கஸ் பெர்னான்டோ, அதி.வந்.டொன் சில்வெஸ்டர்.

**தேசிய கத்தோலிக்க திருவழிபாடு கலாசார ஆணைக் குழு:**
அதி. வந். வியானி பெர்னாடோ, அதி. வந். தோமஸ் சவுந்தரநாயகம்.

**தேசிய கத்தோலிக்க பொது நிலையினரின் ஆணைக் குழு:**
அதி. வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, அதி. வந். எட்மன் பெர்னான்டோ.

**தேசிய கத்தோலிக்க, நீதி, சமாதானம், மனித முன்னேற்ற ஆணைக் குழு:**
அதி. வந். றேமன் பீரிஸ், அதி. வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

**தேசிய கத்தோலிக்க மேய்ப்புப்பணி பராமரிப்பு, இடம் பெயர்ந்தவர்கள், சிறைச்சாலை ஆணைக் குழு:**
அதி. வந். ஒஸ்வல்ட் கோமஸ், அதி. வந். மல்கம் ரஞ்சித்.

**பொது ஜன தொடர்புகள் :** அதி. வந். ஒஸ்வல்ட் கோமஸ்.

**யோசவ்வாஸ் செயலகம் :** அதி. வந். வியானி பெர்னான்டோ

**மெய்யியல் திருச்சபைசட்டத்தொகுப்பு ஆலோசகர்:**
அதி. வந். வியானி பெர்னான்டோ ( தலைவர் )

# பெரிய கோயில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆராட்சிக்கட்டுரை வாசித்தார். சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கைமுறை, சிந்தனை, எழுத்து, பேச்சு அனைத்திலும் வேதாந்தப் பொருளே தொனிக்கிறது. சமயம் என்பது ஓர் ஆன்மீக அநுபவம். இந்த அநுபவத்தின் ஊடாகவே ஆண்டவனைத் தரிசித்து, மனிதர்களையெல்லாம் இறைவனின் வடிவமாகக் கண்டவர் அந்த மகான் என்று மேலும் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்டவிரிவுரையாளர் திரு. S. சிவலிங்கராசா இலக்கியத் துறையில் அடிகளாரின் அளப்பரிய ஈடுபாட்டையும், பங்களிப்பையும் எடுத்துக் காட்டினார். அவரின் ஆராய்ச்சித் திறன் கட்டுரைகள், கவிதைகள் ஊடாக புதியதோர் நோக்கை மக்கள் மனதில் தோன்றச் செய்த வித்தகர் என்று அடிகளாரைப் புகழ்ந்தார்.

''பல்துறை சார்ந்த ஆய்வு, ஆய்விலே ஒரு புதிய பரிமாணம், சீரிய உலகநோக்கு, மானிடம் தழுவிய நோக்கு, சீரிய தீர்க்கதரிசன நோக்கு ஆகியவை சுவாமி விபுலாநந்தரின் சிறப்பியல்கள்'' என்றார் கலாநிதி A. J. V. சந்திரகாந்தன் அடிகள்.

விபுலாநந்தரின் சமூகத் தொண்டைப்பற்றிவித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள், சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முயற்சித்த அடிகளார், யாழ் சமுதாயத்தின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து அதற்கேற்ப சேவையாற்றினாரென்றும், சமூகத்திலிருந்து பெற்ற புறச் சாரங்களைத் தமதாக்கி, தனித்துவத்தையும் கொண்டிருந்தாரென்றும் எடுத்துரைத்தார்.

மில்க்வைற் தொழில் அதிபர், கொடைவள்ளல் கலாநிதி க கனகராசா அவர்கள் விழாவின் ஞாபகார்த்தமாகஓர் மரம் நட்டு, அடிகளாரின் கருத்துக்களும், கொள்கைகளும் மாணவர் மனதில் பதிந்து ஓங்கி வளர வேண்டுமென்று ஆசி கூறினார். முத்தமிழ் மன்ற செயலர் நன்றியுரையாற்றினார்.

சுவாமி விபுலானந்தர் ஓர் தீபம்போன்று ஒளி, வீரம், தியாகம் நிறைந்தவர் என்று தமதுரையில் கூறிய யாழ். பிரதேச செயலாளர் க. குணராசா (செங்கையாழியான்) அவர்கள் பிரதம அதிதியாய் கல்லூரி மதுரம் சதுக்கத்தை அலங்கரிக்க, திரு.சு. வைகுந்தநாதன் தலைமையில் மாலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இசைவேந்தன் பொன் சுந்தரலிங்கம் இறையாரம் வழங்க, மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவாவின் சிறப்புரை முழங்கிற்று. கல்லூரியில் காலாகாலம் பல்வேறு சமய ஆசிரியர்கள் கடமையாற்றிய போதும், அடிகளாருக்கு மாத்திரமே 'பெரிய கோயில் வாத்தியாயர்'' என்ற பெயர் கிடைத்தது. ஒதுக்கப்பட்ட மக்களுக்கு அவர் புரிந்த சேவையால் அம்மக்கள் மத்தியில் அவர் பெற்றிருந்த நன்மதிப்பே காரணம் என்றார் ஆணித்தரமாய் பேசிய ஜீவா அவர்கள்.

புலவர் ஆனந்தராயர் தன் சிறப்புரையில்; பிறரின் சிறப்பை தமிழராகிய நாம் ரசிக்க வேண்டும்; எமது சிறப்பை பிறர் அறிய வேண்டுமென்ற கோட்பாட்டை அடிகளார் கடைப்பிடித்தாரென்று கூறினார். இறுதியாக கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்று, முத்தமிழ் மன்றத் தலைவரின் நன்றியுரையுடன் விழாஇனிதே நிறைவெய்தியது.

# முழு மானிடத்தை நோக்கி...

''கிறிஸ்துவில் நான் முழு மானிடத்தை நோக்கி நம்பிக்கை நிறைந்தவனாக உந்தப்படுகின்றேன், முழுமையான மானிடத்தை உரிமையாக்கிக் கொண்ட மக்கள்குலம்என்னும் இலக்கை நோக்கி உந்தப்படுகின்றேன். சிலர் இலகுவில் சோர்வடைந்து விடுகிறார்கள், ஆனால் என் செயல்களெல்லாம் வீணாகா என்பதை நானறிவேன். மனுமகன் யேசுவின் வருகைக்காக நான் காத்து நிற்கின்றேன். அவரது வருகையில் ''நம் கண்ணீரெல்லாம் துடைக்கப்படும். சாவு என்பது இல்லாதொழியும்.'' ஆனாலும் எனது காத்து நிற்றலோ இயங்குவிசை கொண்டது; நான் தொடர்ந்து போராடுவேன்.

(24.07.83 இல் உயிர் நீத்த இளைஞன் அ. விமலதாசன் 1979இல் ஆசிய மறைத் தூதுப் பணி மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து)

# குடும்ப...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

— ''ஒன்றாய் செபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும்.'' (The family that prays together stays together)

— ''செபிக்கும் உலகம் அமைதியின் உலகம்.'' (A world of prayer is a world of peace.)

இவை போன்ற இவர் அமைத்த சில சுலோகங்கள் காலத்தை கடந்தனவையாய் இன்றும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியவையாகும்.



இறைபதமெய்திய
**25ஆம் ஆண்டு நினைவு**
**அஞ்சலி**
**T. J. சவுந்தரநாயகம்**
**26 – 07 – 1967**

''நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா நீர் இவர் பரிசாய் இருந்தருளும்''

அன்பு மனைவி, மக்கள்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# சன்மார்க்க...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழக முதற் தமிழ் பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'பாரதி சங்கம்' தோற்றுவித்துப் பல்கலைக் கழகங்களிலே பாரதிகவிதைகளைச் சுவைக்கச்செய்தவர், இலங்கையிலே பாரதியை இனங்கண்டு கொண்ட முதற்தமிழ் பேரறிஞர்களுள் ஒருவர் என்ற பெருமைக்கும் அவர் உரியவராவர். தமிழகத்திலும், ஈழத்திலும் நடைபெற்ற பல தமிழ் மாநாடுகளுக்கு அடிகள் தலைமை தாங்கிச் சிறப்பித்துள்ளார், சென்னையில் நடந்த சைவசித்தாந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது. தமிழிலக்கியம் சம்பந்தமாகவும் அவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் மிகப்பல. நிகழ்த்திய சொற்பொழிவுகள் மிகப்பல. இசைத் தமிழ் ஆய்வு நூலாய் எழுதிய யாழ்நூலே பாயிரமாயமைந்த ஏழு பாடல்களிலும் அவரது கல்விச்சிறப்பும் இசையுணர்ச்சியும் ஒளிவிட்டு மிளிரல் காணலாம். யாழ் நூலில் ஏழிசைக்கேற்ப ஏழு இயல்கள் உள்ளன. இத்தகைய ஆராச்சியைச் சிறப்புற நடத்த இயலும் இறையருளாற் போலும் இவ் எல்லாத் தகுதிகளும் விபுலாநந்த அடிகளிடம் வியத்தகு வகையில் சேர்ந்திருந்தன.

மட்டக்களப்பு வாவியிலே பாடு மீனினது இசையின் திறத்தினையும், அதனூடாக ஏழிசையும் பிறக்கும்முறையையும், உள்ளத்துணர்ச்சிகளாகிய நவரசங்களும் தோன்றுவதையும் அவை இசையிலே அமையும் வகையையும் காணலாம். அடிகளாரின் கவிதைகளிலே ஓசை நயமும் சிறந்த கற்பனை வளமும், செந்தமிழ்ச் சொற்பிரயோகமும் பொதிந்துள்ளன. பழமையைப் போற்றும் பண்பாளரான அவர் திருக்குறள், சங்கநூல்கள், சிலப்பதிகாரம் முதலிய காவியங்கள், நீதி நூல்கள் ஆகியவற்றிலிருந்து பல செய்யுள்களையும் தம் பாடல்களிலே இழைத்துள்ளமை படிப்போர்க்கு நன்கு புலனாகும்.

தனது யாழ்ப்பாண வாழ்க்கையின் போது இவர் கிறிஸ்தவ அடியார்களுடன் நன்றே ஒத்துழைத்தார். இவரின் சன்மார்க்க நெறியில் பழமைக்கு எதிரான புரட்சிகரத்தன்மையுடன் மானுடநேயம் ததும்பி வழிந்தது. சகல நீதிகளையும் ஒன்று திரட்டிக்கடைந்து அவற்றின் சாரத்தை எடுப்போமாயின் மனித குலத்தின் நன்மைக்கு இடைவிடாது தொண்டு செய்வதே மிக மேலான சன்மார்க்க நியமம் என்றுகூறி பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்குக் கொண்ட விபுலாநந்த அடிகள் சித்தர்களுக்குரிய இலக்கணங்களைக் கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. மத சார்பற்ற நிறுவனங்களில் செயற்படுவதிலும் அனைத்துமத நம்பிக்கையாளரையும் சமமாக மதிப்பதிலும் ஈடுஇணையற்ற ஓர் துறவியாக இருந்தார். ஒரு துறவியாக முத்தமிழ் வித்தகராக விளங்கிய விபுலாநந்த அடிகள் ஈடுபாடுகாட்டிய அனைத்துத் துறைகளிலும் மானிடச் செழுமை முக்கியத்துவம் பெற்ற துறையாக விளங்கியது. சன்மார்க்க நெறியில் மானிடத்தைநேசித்தார். இயல்பான வேறுபாடுடைய பிரிவுகள் அனைத்தையும் சமமாக மதித்தார். உயர்வு தாழ்வு பார்க்கவில்லை. "எல்லோரும் இன்புற்று இருப்பதல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே'' இதுதான் உண்மையான சன் மார்க்கமாகும், என்றுரைத்த மிக அதிகளவு சமூக மயமாக வாழ்ந்த ஓர் மாபெரும் துறவியாவர்.

சற்றே பருத்த கரிய உருவமும் நிமிர்ந்த நாசியும், நேர் கொண்டபார்வையும், காஷய உடையிலமைந்த துறவுக்கோலமும் பொலிய விளங்கிய விபுலாநந்த அடிகளார் 19–7–47 இல் இறைவனடி சேர்ந்தார். அடிகளாரையொத்த தமிழறிஞர்கள் சிலராகிலும் தோன்றி உழைத்த தாலேயே, இவ் இருபதாம் நூற்றாண்டிலே தமிழும், தமிழ் ஆராய்வும் தலைநிமிர்ந்தன என்பது மறுக்கொணா உண்மை. இந்திரனமுதம் இயைவதாயினும் அதனை விழையாது பிறருக்குரியாளராய் வாழ்ந்து தமிழ்த்தொண்டாற்றிய இப்பெருந்தகையைத் தமிழுலகம் என்றும் மறவாது.

காலமே உன் உயிர் அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்வது போலாகும்.
— ஜேம்ஸ் ஆலன்

# நீதியும் மனித...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாத நாடுகளிலும், நிறுவனமான திருச்சபை பல கட்டுப்பாடுகளையும் ஆபத்துகளையும் எதிர்நோக்குமிடங்களில் பல காலக் கட்டுப்பாடுகளின் பின் திருச்சபை மீண்டும் உருப்பெற்றுவருமிடங்களில், ஏழைகள் நீதியையும் மனித மாண்பையும் அடைந்துகொள்வதற்காக ஓர் ஒருமைப்பாட்டுக்காகக் காத்திருக்குமிடங்களில் மறைபரப்பாளர் தேவைப்படுகின்றனர் என அவர் மேலும் கூறினார்.

# பெற்றோர் பிள்ளைகள் மட்டில் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்

— பீடப்பணியாளர் இயக்குனர்.

யாழ். மரியன்னை பேராலய பீடப்பணியாளர் சபையின் 108ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பெற்றோர் தினவிழாவும் 7.6.92, 8.6.92 ஆகிய இரு தினங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டன.

7.6.92 ஞாயிறு காலை 6.00 மணிக்கு பேராலய முன்றலில் மேற்படி பீடப்பணியாளர் சபையின் கொடியை பேராலய பங்குத்தந்தை S.H. ஜெபநேசன் அடிகளார் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து பீடப்பணியாளருக்காக அன்றைய சிறப்புத் திருப்பலி அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

மறுநாள் 8.6.92இல் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் பெற்றோர் தின விழா ஆரம்பமாகியது. இவ்விழாவிற்கு எமது மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. S.A. மைக்கல்சாமி (அ.ம.தி) அடிகளார் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார். பிரதம விருந்தினரால் மங்கள விளக்கேற்றி இறை வணக்க தீப நடனத்துடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. சபைத்தலைவர் செல்வன் அ. செ. நிஷாந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். செயலாளர் செல்வன் பி.ர. ஜேந்திரக்குமார் 108ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இயக்குனர் அருட்திரு. J. J. மவுலிஸ் அடிகளார் உரையாற்றுகையில் இவ்விழா எடுப்பதன் சிறப்புக்கள் பற்றியும் பெற்றோர் பிள்ளைகள் மட்டில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும் என கூறினார். உதவிப்பங்குத்தந்தை T. தவராஜ சிங்கம் அடிகளார் அவர்கள் தமது உரையில் இயக்குனர் J. J. மவுலிஸ் அடிகளாரின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த வழிநடத்தலில் சபை வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதை தெளிவு படுத்திக் கூறினார்.

பங்குத்தந்தை S. H. ஜெபநேசன் அடிகளார் தமது உரையில் இயக்குனரின் வழி நடத்தலின் கீழ் சபையின் பணி பற்றியும், பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்கு உள்ள கடமை பற்றி குறிப்பிட்டதுடன் பேராலயப் பங்கில் பலர் சிறுவர்களாக இருந்த காலத்தில் இச்சபையில் இணைந்து இறை பணியாற்றியமையால் இன்று சமயத்திற்கும், சமூகத்திற்கும் நற்பணியாற்றும் நல் பிரசைகளாக விளங்குவதைச் சுட்டிக் காட்டியதுடன் இச்சபைக்கு மனம் உவந்து தமது பிள்ளைகளை அனுப்பி வைத்த பெற்றோருக்கு நன்றியும் கூறினார்.

பிரதம விருந்தினர் தமது உரையில் பீடப்பணியின் மகத்துவம் பற்றியும், இப்பணியில் ஈடுபடுவோர் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும் 2ஆம் வத்திக்கான் சங்க ஏடுகளை மேற்கோள் காட்டி திருப்பலி வேளையிலே பணியாளர் உடை அணிவதற்கான அவசியத்தையும் எடுத்துக் கூறி அடிகளார் தாம் இச்சபையில் அங்கத்தவராக இருந்த போது பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

இவ்விழாவினை யொட்டி நடைபெற்ற போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு பரிசில்கள் பிரதம விருந்தினரால் வழங்கப்பட்டன. செல்வன் கி. சத்தியராஜ் அவர்கட்கு இவ்வருடத்திற்குரிய சிறப்பு உறுப்பினருக்கான ''Star of the year'' பரிசில் வழங்கப் பட்டது. சபை அங்கத்தவர்களால் நவரசம் கலந்த கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க அம்சமாக ''புனித மக்ஸ்சிமிலியன் கோவ்பேயின்'' வாழ்க்கை வரலாற்று நாடகம் அமைந்திருந்தது.

உதவிச் செயலாளர் செல்வன் பு. கிளிற்ரசின் நன்றியுரையுடன் பீடப்பணியாளர் பெற்றோர் தின விழா நிறைவு பெற்றது.

பீடப்பணியாளர் சபை
நிர்வாகம்.

## உங்கள் செயலுக்கு

1. இரண்டு அங்கிவைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ளட்டும். (லூக். 3 : 11)
2. உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். (லூக். 6 : 27)
3. உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல, நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள். (லூக். 6 : 36)
4. உன் மீது நீ அன்பு காட்டுவது போல், உன் அயலான் மீதும் நீ அன்பு காட்டுவாயாக. (லூக். 10 : 27)
5. படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். (மாற். 16 : 16)

## விளையும் பயிரை முளையில் காத்திடுவோம்

# காவலன் கண்மணிகள்

ஒளி : 6
சுடர்: 12

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

### என்னகம் :

அன்புக்கினிய கண்மணிகாள்!

நன்மைதரும் நல்லாயன் யேசுவின் ஆசிகள் என்றும் உரித்தாகுக

''பத்துப் பேரும் குணமடையவில்லையா? மற்ற ஒன்பது பேரும் எங்கே? திரும்பி வந்து கடவுளை மகிமைப்படுத்த இந்த அந்நியனைத் தவிர வேறு ஒருவரையும் காணோமே?'' என்று அன்று இயேசு வினாவிய வினாவினைப் படிக்கும் கண்மணியே இந்த வினா உன் உள்ளத்தில் என்ன உணர்வை ஏற்படுத்துகிறது என்பதைச் சற்றுச் சிந்தி.

எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு நன்றி கூறுகிறோமா?... எங்களுக்காகத் தங்களை உருக்கி வாழும் கண்கண்ட தெய்வங்களுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்கிறோமா?

அறிவைத் தரும் கடமையுணர்வு மிக்க ஆசிரியர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கிறோமா?. சிந்தியுங்கள்!

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பது குறள் வழி.

''நன்றி மறவேல்'' என்பது ஔவையின் அமுத வாக்கு. நன்றி என்ற சொல், சொல்பவனுக்கும், இன்பம் தரும். கேட்பவனுக்கும் இன்பம் தரும்.

இன்றைய பொழுதிலிருந்து என்றும் இறைவனுக்கும், பெற்றோர், குரு, ஆசிரியர், மற்றும் பெரியோருக்கும் நன்றியுடையவர்களாக வாழ்ந்து மனித நேயத்தின் உன்னத நிலையைப்பெற இறை யேசுவை வேண்டும்.

உங்கள் அன்பின்
அன்பு விழி

★

## நல்வழி நம் வழி

1. காலையிலும், மாலையிலும் எவ்வேளையிலும் இறைவனுக்கு நன்றி கூறுவோம்,
2. அன்னைக்கும், பிதாவுக்கும் நன்றி மிக்கவர்களாக வாழ்வோம்.
3. கலைக்கோயிலாம் கல்விக்கூடத்தில் நன்றி உணர்வுடன் நாளும் இருப்போம்.
4. இன்று எமக்காக உழைப்போர்க்கு நன்றியுடையவராக வாழ்ந்து, நாளைய நற்சமூகம் படைப்போம்.
5. ''நன்றி'' என்ற வார்த்தையை நான்கு உள்ளங்களில் விதைத்து, நாளை நல் அறுவடைகாண்போம்.

★ ★ ★

## நலமுடன் வாழ அன்னையிடம் ஒப்படைப்போம்

மாமரியிடமிருந்து ... ... ...
மனுமகன் உருவெடுத்தார்.
காலாதி காலத்திற்கு முன்பே
கடவுள் தேர்ந்தெடுத்தார் மரியை
அழகான பெண்ணிருந்தும் — மரி

வேண்டும் என கூறினார்.
உதவிப்பங்குத்தந்தை T. தவராஜசிங்கம் அடிகளார் அவர்கள் தமது உரையில் இயக்குனர் J. J. மவுலிஸ் அடிகளாரின் கடமை, கண்ணியம்,

(லூக். 10 : 27)

5. படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். (மாற். 16 : 16)

# விளையும் பயிரை முளையில் காத்திடுவோம்

சிறுவர்களாயினும் அவர்களது மனம் ஆற்றல் மிக்கது. அவர்கள் உண்மையின் உறைவிடமாய், ஒழுக்கத்தின் நிலைக்கலமாய், டண்பின் விளைநிலமாய்த் திகழ பள்ளியில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோர்களும் பெரும் பொறுப்பேற்க வேண்டும்.

பெற்றோர்களை மதிப்பது, பெரியவர்களைத் துதிப்பது, அயலாரை நேசிப்பது, ஆகாதவர்களையும் அன்பால் வெல்லுவது. கடமையாற்றுவது, கட்டுப்பாட்டுடன் நடப்பது, கட்டளைக்குக் கீழ்படிவது ஆகிய நற்பண்புகளை இளமையில் பாடுபட்டு வளர்த்தால் தான் பயிரினும் சீரிய பாலர்கள் நாளை சிறந்தப் பண்பாளர்களாகத் திகழ்வர்.

சிறுவர்கள் எப்படிபட்ட அறிவுள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர்களாக, பண்படுகிறார்களோ அப்படித்தான் அவர்களது வருங்கால வாழ்வும் அமையும். மாட்டை கட்டி காபந்து செய்யா விட்டால் கண்டவரது கழனிகளில் மேய்ந்து வீண் நட்டத்தை விளைவிப்பதைப் போன்று சிறுவர்கள் வேண்டாத வேலைகளில் ஈடுபட்டு இழுக்கு விளைவித்து விடுவார்கள்.

ஐந்தில் திருத்தாமல் ஐம்பதில் ஒருவனை திருத்துவது எளிதல்ல. நீரும் உரமும் போன்று, பயிரைப் போன்ற சிறுவர்கட்கு பெற்றோரும் ஆசிரியரும் உடந்தையாய் நின்றால் மட்டும் போதாது, அவர்களிடம் காணும் குறைகளையும் அவ்வப்போது களைவதில் கவனம் செலுத்த வேண்டும்.

பயிருக்கு வேண்டிய ஊட்டப் பொருட்கள் அனைத்தையும் கொடுத்து விட்டு களை பறிக்காமல் விட்டுவிட்டால் பலன் ஏது? அதேபோல் சிறுவருக்கு வேண்டிய உணவு, உடை, புத்தகம், பலகை ஆகிய அனைத்தையும் கொடுத்து விட்டு அவர்களிடம் முளையிடும் தீயப்பழக்கங்களை வெட்டி வீழ்த்தா விட்டால் அவர்களது வாழ்க்கை செழிக்கவும் சிறக்கவும் வழி ஏது!

சிறுவர்களிடம் காணும் தீய குணங்களைக் களைந்து நற்பண்புகளை பேணி வளர்த்தால் தான் இன்றையப் பையன் நாளை ஐயனாக, நல் ஆசிரியனாக, அறிஞனாக, அமைச்சராக, ஆளுனராக, ஆட்சியாளராக பொறுப்பேற்று; நல்லவனாகவும், வல்லவனாகவும், நாட்டிற்கும், வீட்டிற்கும் நற்பணியாற்ற முடியும்.

யோ. ஆனந்தன்.

## நலமுடன் வாழ அன்னையிடம் ஒப்படைப்போம்

மாமரியிடமிருந்து ... ... ...
மனுமகன் உருவெடுத்தார்.
காலாதி காலத்திற்கு முன்பே
கடவுள் தேர்ந்தெடுத்தார் மரியை
அழகான பெண்ணிருந்தும் — மரி
அன்னையையே அழைத்தார்.
தாயாகவும், கன்னியாகவும் இத்தரணிக்கு — இவள்
தனித்தே விளங்குகின்றாள்.
திருக்குடும்பத்தின்!...
தியாக ஒளி கிறிஸ்துவே.
தாழ்ச்சி எனும் தயை நிறை குணத்தை
தாய்மரி தன்னோடு இருத்தினாள்,
நீதிமானாகிய நல் — சூசை
நிம்மதி அளிக்கும் தந்தையுமே.
திருக்குடும்பத்தின் வழிசெல்லும் — எம்
திருச்சபை, அறநெறியில் தளைக்கின்றது.
அருள்களை அள்ளிவழங்கும் அம்மூவருள் — யேசு
ஆண்டவர் தந்தை, ஆவியுடன் கூட இருப்பார்.
நாமனைவரும் நலமுடன் வாழ
நாடி அவர்கள் பதம் செல்வோம்.
அவர்களும் அண்டிவரும் அடியார்க்கு
அருளினை அள்ளியே அளித்திடுவார்.
இருகரம் நீட்டும் அன்னையிடம்
இவ்வுலகையே ஒப்படைப்போம் — ஏனெனில்
இருள் நீக்கி ஒளியின் உலகத்தை சன்றெடுக்க
இரந்திடுவோம் — அன்னை
இரங்கிடுவாள்.

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ் கத்தோலிக்க வாரப் பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

## திருத்தந்தையின் 3வது அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது

**— உலகனைத்தினதும் செபத்தின் ஒன்றிப்பு**

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர், தனது 72ஆவது வயதில், உரோம் நகரிலுள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, கடந்த புதன் 15ஆம் திகதியன்று 3ஆ து அறுவைச் சிகிச்சைக்குள்ளானார். 4மணி நேரம் நடந்த இச்சிகிச்சையில், குடலிலிருந்த கட்டி ஒன்றும், பித்தப்பையும் அகற்றப்பட்டதாயும், அவரின் உடல்நிலை தேறி வருவதாயும், 10 நாட்களில் மருத்துவமனையிலிருந்து வெளியேறுவாரென மருத்துவ குழுத் தலைவர் கூறினார்.

முதல் அறுவைச் சிகிச்சை 1981, மே மாதம் 13ஆம் திகதி செய்யப்பட்டது. திருத்தந்தைக்கு குண்டுகள் துளைத்ததினால் குடலில் ஏற்பட்ட காயங்களை குணப்படுத்த குடலில் ஆகாரம் செல்ல செயற்கையான மாற்றுப் பாதையை அமைத்தார்கள். அதே ஆண்டு ஆகஸ்டு 5அன்று நடந்த 2 வது அறுவைச் சிகிச்சை மூலம் ஆகாரம் பழையபடி இயற்கைக் குடல் வழியாக செலுத்த வகை செய்தனர்.

பாப்பரசர் விரைவில் உடல் நலம் பெற்று மீண்டும் தனது பணியை தொடர்ந்து ஆற்ற இறைவனை வேண்டி, வாழ்த்துச் செய்தி அனுப்பிய உலகளாவிய அரசியல், மற்றும் சமய சமூகத்தலைவர்கள், நலன் விரும்பிகளில், 1981ஆம் ஆண்டில் திருத்தந்தையை வத்திக்கான் புனித இராயப்பர் சதுக்கத்தில் கொலை செய்ய, எத்தனித்த மொகமத் அலி அவ்காவும் அடங்குவர்.

## மடுத்திருப்பதியில் ஆவணி மாதத் திருவிழா


*06-08-92 :* நவநாள் வழிபாடுகள் ஆரம்பம். தினமும் காலையில் திருப்பலிகளும் மாலையில் செபமாலை, மறைஉரை, நற்கருணை ஆசீர்வாதம் இடம் பெறும்.

*14-08-92 :* மாலை நற்கருணை ஆராதனை, பவனி, ஆசீர் வாதம் இடம் பெறும்.

*15-08-92 :* காலை திருநாட்திருப்பலி, அன்னையின் திருச் சுரூபப்பவனி, ஆசீர்வாதம் இடம் பெறும்.

**அருட் திரு. பி. ஜேசுறாஜா,**
**பரிபாலகர்,**
மடுத்திருப்பதி

A/21/92



## பிரமாணிக்கமுள்ள சேவையாளர் இம்மானுவேல் அதிர்ச்சியால் மரணம்

**(படத்தில் இடதுமூலையில் நிற்பவர்)**

எமது புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் கடந்த 46 வருடங்கள் பல துறைகளிலும் வல்லுனராக சிறந்த பணி புரிந்தவரும் யாழ் நகரில் பிரபல மின்சாரத் திருத்துனர், பைப் இணைப்பாளருமாக வேலை செய்து பலராலும் நன்கு அறியப்பட்டவருமான மரியாம்பிள்ளை இம்மானுவேல் (யேசுராசா) 20–07–1992 திங்கட்கிழமையன்று மண்டைதீவு முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட ஷெல் குண்டின் அதிர்ச்சியினால் இறைபதம் எய்தி விட்டார் என்பதனை ஆழ்ந்த மனத்துயரத்துடன் பாதுகாவலன் வாசக அன்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

1934 இல் பிறந்த இவர் தனது 11 வது பிராயத்தில் இவ்வச்சகத்தில் பணிபுரிய ஆரம்பித்தார். அச்சக வேலைகள் சம்பந்தமான எல்லாத்துறைகளிலும் கைதேர்ந்தவராக விளங்கியதுடன், இளைய ஊழியர்களுக்கு பயிற்சி தரும் வழிகாட்டியாகச் சிறந்த பணி புரிந்தார்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவிக்கும், இருபிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மா நித்திய இன்பத்தில் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

## தமிழரின் அரிய சொத்து சைவ சித்தாந்தம்

● கலாநிதி நீ. மரியசேவியர்

கலைவழி மூலம் இறைபணியாற்றும் யாழ். திருமறைக் கலா மன்றத்தின் ஒரு அங்கமாகிய சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் 3ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிறு 12 – 07 – 92 காலை 9.30 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் திருமதி அருள் நங்கை B. A. (Hons) தலைமையில் நடந்தேறியது.

கலாமன்றப் பொதுச் செயலாளர் திரு V. J. கொன்ஸ்ரன்ரைன் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் ''இந்து தத்துவத்தில் சைவ சித்தாந்தம்;'' ''பொது நலப்பண்பே சைவ சித்தாந்தத்தின் உயிர் மூச்சு'': ''சைவ சித்தாந்தமும் அண்மைக் கால ஆய்வுகளும்'' என்னும் முத்தலைப்புகளில் நீண்டதோர் உரையாற்றினார். அத்துடன் சைவ சித்தாந்தம் தமிழர்தம் அரிய சொத்து என்றும், அதை மேற்குலகு அறியும் வண்ணம் கிறிஸ்தவ குரவர்கள் ஆற்றியுள்ள அரும் பணிகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

இசைத்தென்றல் M. யேசுதாசன் குழுவினர் வழங்கிய திருவுந்தியார் பக்திப் பாடல் நிகழ்ச்சியுடன் விழா இனிதே முடிவுற்றது,

★ ★ ★

## மரியாயின் பக்திக்கு புத்தூக்கம்

அண்மைக் காலத்தில் பல இடங்களில் தேவதாயின் பக்தி புத்துயிர் பெற்று வருகின்றது.

★ நேபாள கத்தோலிக்கர் இரண்டாவது முறையாக தேவதாயின் வணக்கமாத நிகழ்ச்சிகளை பகிரங்கமாகக் கொண்டாடினர். வீடுகளில் கூடி செபமாலை செபித்ததுடன் தேவதாயின் திருச்சுரூபத்தை வீதிகளில் பவனியாகக் கொண்டு சென்றனர்.

கடந்த நவம்பர் மாதம், இந்து மதத்தினரை மனந்திருப்புவதற்கெதிரான சட்டங்களை நீக்கி, மத சுதந்திரத்தை அளிக்கும் புதிய அரசியல் யாப்பு கொண்டுவரப்பட்டபின் இந்து இராட்சியத்தின் தலைநகரில் நடந்த இரண்டாவது பவனி இதுவாகும்.

★ பம்பாய் மறைமாவட்டத்தில் முதற் சனிக்கிழமை பரிகாரப் பக்திமுயற்சி மரியாயின் சேனையினதும், பிறரதும் முயற்சியால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம் முயற்சியை பேராயர் கருதினால் சைமன் பிமென்டா ஆசீர்வதித்துள்ளார்.

பத்திமாவில் தேவதாய் காட்சி கொடுத்ததன் 75 வது ஆண்டாகிய இவ்வாண்டில், மரியாயின் பக்திக்கு ஒரு புத்தூக்கம் ஏற்பட்டுள்ளதை காணக் கூடியதாயிருக்கின்றது.

திருத்தந்தை தமது பிரயாணங்களின்போது தேவதாயின் திருத்தலங்களைத் தரிசித்தமை, 1987 இல் செய்மதி தொலை தொடர்பில் அகில உலக செபமாலை நிகழ்ச்சியை நடத்தியமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் மரியாயின் உதவியைப் பகிரங்கமாக வேண்டியமை, மரியாயின் வேண்டுதலுக்கும் கிழக்கு ஐரோப்பாவின் புதிய விடுதலைக்கும் இடையில் காணப்படும் தொடர்பு, பத்திமாபதிக் காட்சிகளின் யூபிலி ஆண்டு இவையனைத்தும் தேவதாய் பக்திக்குப் புத்தூக்கம் அளித்துள்ளன.

## முன்னாள் ஜனாதிபதி மனம்திரும்பினார்

முன்னாள் செக்கோஸ்லொவேக்கிய ஜனாதிபதியும் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளருமான கஸ்டாவ் ஹுசாக் என்பவர் நவம்பர் 18ஆம் திகதி மரணமாகுமுன் கத்தோலிக்க மறையைத் தழுவியதாகக் கூறப்படுகிறது. வைத்திய சாலையில் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த அவரை பேராயர் டயர்னோ தரிசித்ததாகவும் அங்கு அவருக்கு இறுதி அருட்சாதனங்களை அளித்ததாகவும் கூறப்படுகிறது.

சிறுபருவம் தொட்டு அவருக்காகச் செபித்து வந்த ஒரு சகோதரியின் செபமே இந்த மனந்திரும்புதலுக்குக் காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

## பெப்ரவரி 11ஆம் திகதி நோயாளருக்கான உலக தினம்

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி நோயாளிகளுக்கான உலகதினமாக அனுசரிக்கப்பட வேண்டுமென, சுகநல பணியாளரின் மேய்ப்புப்பணிக்கான பாப்பரசரின் ஆலோசனைக் குழுத் தலைவருக்கு திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் எழுதிய மடலில் தெரிவித்திருக்கிறார்.

சமுதாயத்தைச் சார்ந்த எல்லோரும், சிறப்பாக இறைமக்கள் அனைவரும் தத்தம் கத்தோலிக்க சுக்நல நிறுவனங்களுடாக நோயாளிகளுக்கு சிறந்த உதவி அளிப்பதன் அவசியத்தை உணர்த்துவதும், நோயாளிகள் தங்கள் துன்பத்தின் பெறுமதியை புரிந்து கொள்ள உதவுவதும் வருடாந்த தினத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

## இந்திய கத்தோலிக்க சங்கத்தின் ஆலோசனை

அயோத்தியில் எழுந்துள்ள பாபர் மசூதி ராம ஜன்மபூமி பிரச்சினைக்கு தீர்வுகாண அகில இந்திய கத்தோலிக்க சங்கம் ஒரு புதிய ஆலோசனையைக் கூறியுள்ளது. ஜெருசலேமில் இருப்பது போன்ற ஒரு கொள்கை முறையை சம்பந்தப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வது என்பதுதான் அது.

அயோத்தியில் 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இம் மசூதி இருக்குமிடத்தில் ஓர் இந்து ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்துக்களின் திட்டம். இம்மசூதி ஏற்கெனவே இருந்த ஓர் இந்து ஆலயத்தின் மீது எழுப்பப்பட்டது என்பதுதான் அவர்களின் வாதம்.

கிறிஸ்தவர், யூதர், முஸ்லீம்கள் ஆகிய மூன்று மதத்தினரும் உரிமை கோருகின்ற ஜெருசலேம் சர்வதேச ரீதியில் ஓர் முன்மாதிரியாக இருக்கின்றது எனவும் அயோத்தியில் உரிமை கோரும் இந்துக்கள், முஸ்லீம் ஆகிய இரு சாராரும் பின்பற்றக் கூடியது இது எனவும் கத்தோலிக்க சங்கம் அபிப்பிராயம் தெரிவித்தது. மே 23ஆம் திகதி லக்னோவில் நடந்த கூட்டத்திலேயே இவ்விடயம் ஆராயப்பட்டது.

**காவலன் வாசகர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்! ......**

**பத்துப் புதிய சந்தாதாரரை சேர்ப்பவர்களுக்கு உங்கள் பத்திரிகை இனாம்.**

- வருடாந்த சந்தா : ரூபா 150 /=
- பெயர் முகவரிகளுடன்

காரியாலயத்தில் தொடர்பு கொள்க.

முகாமையாளர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**